[1984 மார்ச் 7

சேத்தியாத் தோப்பிலிருந்து வனகிரி வரை வெள்ளாற்றுக்கரைக்கும் தடுப்புச்சுவர் அமைக்கும் திட்டம்.

206—(*வினா எண் 19681)—திரு. ஏ. இராமலிங்கம்: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தென்னாற்காடு மாவட்டம் சேத்தியாத் தோப்பிலிருந்து புவனகிரி வரை வெள்ளாற்றுக் கரைக்குத் தடுப்புச் சுவர் அமைக்கும் திட்டம் எப்போது துவங்கி முடிக்கப்படும்?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது. திட்டம் சம்பந்தமாக கேட்கப்பட்டுள்ள சில கூடுதல் விபரங்கள் தலைமைப் பொறியாளர் (பாசனம்) அவர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றன.

பிளவக்கல் நீர்த்தேக்கத்திலிருந்து விழுப்பனூர் கிராமத்திற்குத் தண்ணீர் வழங்கும் திட்டம்

207—(*வினா எண் 19750)—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவில்லிபுத்தூர் வட்டம் வத்திராயிருப்புக் கிராமம் பிளவக்கல் நீர்த் தேக்கத்திலிருந்து விழுப்பனூர் கிராமத்திற்குத் தண்ணீர் கொடுக்கும் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு யா. சை. மு. யூசுப்: ஆம்.

மோர்தானா அணை கட்டும் திட்டம்

208—(*வினா எண் 19975)—திரு. கே. ஆர். சுந்தரம்: மற்றும் திரு. ஏ. எம். சேதுராமன்: மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடியாத்தம் அருகில் மோர்தானா அணை கட்டும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அந்த வேலை எப்பொழுது துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: (அ) மற்றும் (ஆ) திட்டம் தலைமைப் பொறியாளரின் ஆய்வில் உள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS